**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No.85 of 2017

Deposition of D.W.1

Name of the Witness: திருமதி.அழகுராணி

Date : 02.04.2025

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

13) 1959 பாகபிரிவினை பத்திரத்தில் என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட பி ஜாபிதா சொத்துக்கள் என்ன என்ன என்று எனக்கு தெரியும். நிலம் ஒதுக்கப்பட்டது தெரியும், அதில் நஞ்சை நிலம் எவ்வளவு, புஞ்சை நிலம் எவ்வளவு, அளவு, புல எண் எனக்கு தெரியாது. அந்த நிலங்கள் எந்தெந்த வருவாய் கிராமத்தில் உள்ளது என்றால் பழைய தருமபுரியில் இருந்தது. பழைய தருமபுரி இல்லாமல் வேறு வருவாய் கிராமத்தில் சொத்துக்கள் எனது அப்பாவிற்கு ஒதுக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. மதிகோண்பாளையத்தில் எனது அப்பாவிற்கு காலி மனை, இரண்டு வீடுகள் ஒதுக்கப்பட்டது என்றால் ஒரு வீடு தான் எனது அப்பாவிற்கு பாகமாக வந்தது.

14) பழைய தருமபுரியில் சர்வே எண் 295 நஞ்சை 2 ஏக்கர் 10சென்ட் எனது அப்பாவிற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்தை விற்று தான் அம்மா எங்கள் ஐந்து பேரையும் படிக்க வைத்து திருமணம் செய்து வைத்தார். பழைய தருமபுரியில் சர்வே எண் 499 0.26சென்ட் எனது அப்பாவிற்கு ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு

நியாபகம் இல்லை. பழைய தருமபுரியில் சர்வே எண் 319 நஞ்சை 0.12 சென்ட் நிலம் மற்றும் வட்டகிணறில் 4ல் ஒரு பங்கு, சர்வே எண் 490ல் 75 1/2 சென்ட் நிலம் மற்றும் புல எண் 493ல் உள்ள கிணற்றில் 4ல் ஒரு பங்கு, புல எண் 473ல் புஞ்சை ஏக்கர் 4.90, சர்வே எண் 474 புஞ்சை ஏக்கர் 1.88, சர்வே எண் 475 ல் புஞ்சை ஏக்கர் 3,56 ஆக மொத்தம் 10 ஏக்கர் 34 சென்ட், இதில் உரிய செக்குபந்தி உட்பட்ட முதல் தாக்கு புஞ்சை ஏக்கர் 1.50, இரண்டாவது தாக்கு 5.57 மற்றும் சர்வே எண் 274/3ல் உள்ள கிணற்றில் 4ல் ஒரு பங்கு பாத்தியம், கோணங்கிநாய்க்கனஅள்ளி கிராம சர்வே எண் 275 பொதுவில் 4ல் ஒரு பங்கு 5.75 சென்ட், கோணங்கிநாய்க்கனஅள்ளி கிராம சர்வே எண் 287ல் 0.25.5 சென்ட், சர்வே எண் 288ல் 4ல் ஒரு பங்கு 0.11.50 சென்ட், சர்வே எண் 281ல் 4ல் ஒரு பங்கு 13 1/4 சென்ட் ஆகிய நிலங்கள் எனது அப்பாவிற்கு ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு சரியாக விவரம் தெரியவில்லை. வருமானத்திற்கு வழியில்லை என்பதால் எல்லா சொத்தையும் விற்று தான் எங்கள் அம்மா எங்களை பராமரித்து வந்தார். நான் அப்போது மைனராக இருந்தேன். சரியாக விவரங்கள் தெரியாது.

15) நான் 1954ம் வருடம் பிறந்தேன். எந்த வருடம் திருமணமானது என்று நியாபகம் இல்லை. எனக்கு 18 வயது பூர்த்தி அடைந்த பிறகு திருமணம் ஆனாத அல்லது அதற்கு முன்பு திருமணம் ஆனாத என்று நியாபகம் இல்லை. சொத்துக்களை யார் யாருக்கு எவ்வளவு விற்றார் என்றால் நான் மைனராக இருந்த காரணத்தினால்

தெரியவில்லை. நான் மேஜரான பிறகும் அந்த விவரங்களை தெரிந்து கொள்ளவில்லை. என் தம்பி சௌந்தர்ராசனுக்கு எப்போது திருமணம் ஆனது என்று தெரியாது. என் தம்பி ராஜவேலுக்கு எப்போது திருமணமானது என்று நியாபகம் இல்லை.

*16)* என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட பெரும்பான்மையான நஞ்சை, புஞ்சை நிலங்களை எனது அம்மா அவருடைய பெண் வாரிசுகளுக்கு வாய்மொழி பாகமாக ஒதுக்கப்பட்டு அந்த சொத்துக்களை மகள்களின் படிப்பிற்கும், திருமணத்திற்காகவும், சீர்வரிசை செய்வதற்காகவும் மகள்களின் அனுமதியுடன் சொத்தை விற்றார் என்றாலும், எஞ்சி இருந்த தாவா சொத்துக்களை இறந்து போன ராஜவேலுவின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. ராஜவேலு இருந்த வரை தாவா சொத்துக்களுக்கு அவர் பெயரில் பட்டா வாங்கி வரி செலுத்தி, வாடகை வாங்கி நிர்வாகம் செய்து வந்தார் என்றாலும், ராஜவேலு 2002ல் இறந்த பிறகு 2 முதல் 4 வாதிகள் மைனர் என்பதால் 1ம் பிரதிவாதி வீட்டிற்கு பெரியவர் என்ற முறையில் வாடகை வாங்கி தாவா சொத்துக்களை நிர்வகித்து வந்தார் என்றால் சரியல்ல. எனது அம்மா தான் எப்போதும் வாடகை வாங்குவார். என் அம்மா வாதிகளுக்காக தான் வாடகை பெற்றார் என்றாலும், அதில் எங்களுக்கோ, எனது அம்மாவிற்கோ எந்த ஒரு தனிப்பட்ட உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

*17)* குடும்ப நிர்வாகம் குறித்து பிரச்சனை ஏற்பட்டதால் வாதிகளே வாடகை வாங்கி அவர்களே சொத்துக்களை நிர்வாகம் செய்வதாக

சொன்னதை 1ம் பிரதிவாதி ஏற்று கொள்ளாமல் எங்கள் பேச்சை கேட்டு கொண்டு வாடகையை 1ம் பிரதிவாதி வாதிகளின் குடும்ப செலவிற்கு பயன்படுத்தாமல் அவருடைய மகள்களின் பேச்சை கேட்டு நடந்து வந்தார் என்றால் சரியல்ல.

18) நான் காவல் துறையில் இருந்து ஓய்வு பெற்றதாலும், 6ம் பிரதிவாதி காவல் ஆய்வாளராக பணிபுரிவதால் அதை பயன்படுத்தி கொண்டு 11ம் பிரதிவாதி மூலமாக பேசி என் அம்மா 1ம் பிரதிவாதி தான் வாடகை பெற்று கொள்வார் என்று சொல்ல வைத்தோம் என்றால் சரியல்ல. காவல்துறையினர் வாதிகளை மிரட்டியதால் 1ம் பிரதிவாதி வாடகைதாரர்களுக்கு 7 முதல் 10 பிரதிவாதிகளுக்கும் மற்றும் காவல் துறையினருக்கு வாதிகள் சட்ட அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் அறிவிப்பு அனுப்பினார்கள். 19.05.2017ல் 1, 7 முதல் 11 பிரதிவாதிகளுக்கு வாதிகள் ஒரு சட்ட அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த சட்ட அறிவிப்பின் நகல்கள் வில்லங்கம் எதுவும் ஏற்படுத்த கூடாது என்பதற்காக காவல் துறை அதிகாரிகள் மற்றும் சார்பதிவாளருக்கு அனுப்பப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

19) வாதிகள் போலிசாரிடம் போவதற்கு முன்பாகவோ அதற்கு பிறகும் தற்போது வரை தாவா சொத்துக்களை வாடகைக்கு விட்டு வாடகை ஒப்பந்தம் போட்டு வாடகை வாங்கி வருகிறார்கள் என்றால் சரியல்ல. 7 முதல் 10 பிரதிவாதிகள் வாடகைக்கு இருந்த வரை அவர்கள்

வாதிகளுக்கு தான் வாடகை செலுத்தி வந்தார்கள் என்றாலும், 8, 9 கடையை காலி செய்த பிறகு வேறு கடைகளுக்கு வாடகைக்கு விட்டு அந்த கடைகாரர்கள் காலி செய்த பிறகு அவர்களே பெட்டி கடை வைத்து நடத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. 8ம் பிரதிவாதி காலி செய்த பிறகு வேறு கடைகள் வைத்து தற்போது டாஸ்மார்க் கடைக்கு வாதிகள் வாடகைக்கு விட்டுள்ளனர் என்றால் அது பொது சொத்து, எங்களுக்கு தெரியாமல் வாடகைக்கு விட்டுள்ளார்கள். எங்களுக்கு தெரியாமல் வாடகைக்கு விட்டது சம்பந்தமாக டாஸ்மார்க் கடைக்கு நோட்டிஸ் கொடுத்துள்ளோம். அந்த நோட்டிசை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

20) 17.10.1967 பாக பிரிவினை பத்திரம் எனது அம்மா அவர் தனிப்பட்ட உரிமையில்லாமல் அந்த ஆவணத்தில் பாகஸ்தர் என்று குறிப்பிட்டுள்ள நபர்களிடம் கள்ளகூட்டு சேர்ந்து அந்த ஆவணத்தை தயார் செய்துள்ளார் என்றாலும், அந்த ஆவணம் செல்லத்தக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. 1967ல் பாக பிரிவினை செய்யப்பட்ட சொத்துக்கள் 1959 பாக பிரிவினை பத்திரத்தில் என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்டது போக விடுபட்ட சொத்துக்கள் என் அப்பாவிற்கு வாய்மொழியாக ஒதுக்கப்பட்டு அந்த சொத்துக்கள் எங்கள் குடும்பத்தில் நடந்த வாய்மொழி பாகபிரிவினையில் ராஜவேலுவுக்கு அந்த சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

21) 1967 பாகபிரிவினையில் என் அம்மாவின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என் அப்பாவின் பாகத்திற்காக ஒதுக்கப்பட்டது என்றாலும் அதில் எனது அம்மாவிற்கு தனிப்பட்ட உரிமைஎதுவும் கிடையாது என்றால் சரியல்ல. எனது அம்மாவிற்கு உரிமையில்லாத சொத்தை எங்கள் பேரில் எனது அம்மா 1967ல் பாகபிரிவினை பத்திரத்தை ஆவணமாக காட்டி எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரங்கள் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. குறிப்பாக 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களில் எந்தவித தனிப்பட்ட உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

22) எங்கள் குடும்பமே தருமபுரியில் நிறைய சொத்துக்கள் உள்ள பெரிய குடும்பம் என்றாலும், என் தாயார் லேவாதேவி தொழில் செய்து நல்ல வருமானம் அடைந்து வந்தார் என்றாலும், அதனால் குடும்பத்தை பராமரிப்பதற்கு வருமானம் இல்லாத காரணத்தால் சொத்துக்களை விற்று என் அம்மா எங்களை பராமரித்து வந்தார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. பெண்களின் திருமணம் மற்றும் சீர்வரிசைகள் ஆடம்பராமாக செய்ய வேண்டும் என்ற காரணத்தினால் தான் பெண்களுக்க வாய்மொழி பாகம் மூலமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்களை எங்களின் அனுமதியுடன் தான் விற்றார் என்றால் சரியல்ல. நான் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. எனக்கு வழக்கு சொத்துக்களின் முழு விவரம் தெரியவில்லை என்றால் நான் ஒரு கேள்விநிலை சாட்சியம் என்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்று கொள்ள முடியாதது என்றால் சரியல்ல.